செய்தி வெளியீடு எண்.631 நாள்.6.8.2008

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் அமரர் திரு.அய்யணன் அம்பலம் அவர்களது மனைவி திருமதி.மகமாயி என்ற கருப்பாயி அவர்களுக்கு 1.4.2007 முதல் அவர் வாழ்நாள் முழுவதும் மாதம் ஒன்றுக்கு ரூ.3000/– குடும்ப ஓய்வூதியம் வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

இன்று (6.8.2008) மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் அமரர் திரு.அய்யணன் அம்பலம் அவர்களின் மனைவி திருமதி.மகமாயி (எ) கருப்பாயி அவர் வாழ்நாள் முழுவதும் மாதம் ரூ.3000/– ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணையினையும் 1.4.2007 முதல் 31.7.2008 வரையிலான ஓய்வூதியம் நிலுவைத் தொகை ரூ.48,000/–க்கான காசோலையை நேரில் வழங்கினார்கள். இந்த ஓய்வூதியம் மாதந்தோறும் ஓய்வூதியரின் வங்கி சேமிப்பு கணக்கில் நேரில் செலுத்தப்படும்.

ஓய்வூதியம் பெற்ற திருமதி.மகமாயி (எ) கருப்பாயி தனது கணவர் திரு.அய்யணன் அம்பலம் அவர்கள் 1970 முதல் 1976 வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராக பணியாற்றியதை நினைவு கூர்ந்து, தனது நிதிநிலைமையை கருத்திற்கொண்டு தனக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.